மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.மஎண்.04/2023
உள்
இ.ம.எண்.02/2022
உள்
அசல் வழக்கு எண்.34/2022
--------

சா.கி.சாத்தூரப்பன் ... மனுதாரர்/3 ம் நபர்/7 ம் உத்தேச வாதி

/எதிர்/

1. வீரணன்
2. சாத்தூரப்பன்
3. சத்தியமூர்த்தி
4. ஸ்ரீதர்
5. அழகுமலை
6. திருநாவுக்கரசு ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

1. அய்யனார்
2. மாரியப்பன்
3. தமிழ்செல்வன்
4. பால்பாண்டி
5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில்
இருக்கன்குடி அதன்
தற்கால டிரஸ்டி மூலமாக
6. செயல் அலுவலர்,
இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன்
திருக்கோவில் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 31.07.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 05.12.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/3 ம் நபர்/7 ம் உத்தேச வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.A.விஸ்வநாத்

அவர்கள் ஆஜராகியும், 6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வாசவன் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகிவும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், கி.சாத்தூரப்ப பண்டிதனின் வாரிசான கி.சா.கிருஷ்ணன் பண்டிதனின் வாரிசான மனுதாரர்/3ம் நபராகிய மனுதாரரை அசல் மனுவில் 7ம் உத்தேச வாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 28.02.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/3ம் நபர்/7ம் உத்தேச வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்**:–

மனுதாரர் முன்னோர்கள் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் பரம்பரை பரம்பரையாக நாவிதர்கள் தொழில் செய்து வருகிறார்கள். அவ்வாறு மனுதாரர் பரம்பவரையாக நாவிதம் தொழில் செய்து வருவதால் மனுதாரர்களுக்கு திருக்கோவிலில் இருந்து கொடுக்கப்படும் மொட்டை சீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய நாவிதர்களுக்கான பங்கு தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது அசல் வழக்கில் கண்ட வாதிகள் பரம்பரை நாவிதர்களாக அறிவிக்கக்கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் வழக்கறிஞர் கடந்த 10.06.2022ம் தேதியில் சந்தித்தபோது தான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. ஆகவே, மேற்படி வழக்கில் மனுதாரரையும், அசல் வழக்கிலும், அசல் மனுவிலும் அவசியமான கட்சியாக சேர்த்துக்கொள்ள வேண்டி தனியாக மனு தாக்கல் செய்துள்ளார். தற்போது மனுதாரருக்கு 71 வயதாகிறது. மனுதாரர் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவிலில் பரம்பரை நாவிதராக இருந்து மொட்டை

போடும் தொழில் செய்து வருகிறார். அதற்கு உண்டான மானியங்களும் பெற்று வந்துள்ளார். தற்போது எதிர்மனுதாரர்கள் மட்டுமே பரம்பரை நாவிதர்களாக விளம்புகை செய்ய மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். உண்மையில், மேற்படி அசல் வழக்கில் கண்டுள்ள வாதிகள் மட்டுமே பரம்பரை நாவிதர்கள் ஆவார்கள். அதனால் மனுதாரர் கிருஷ்ணனின் கொடி வழியில் உள்ள கி.சாத்தூரப்ப பண்டிதனின் வாரிசான கி.சா.கிருஷ்ணன் பண்டிதனின் வாரிசு என்பதால் அசல் வழக்கில் உத்தேச வாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கினை மேற்கொள்ள வேண்டியது நீதியின் பொருட்டு அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனு திருக்கோவிலில் பரம்பரை அறங்காவலர்கள் மற்றும் பரம்பரை பூசாரிகள் மட்டுமே பூஜை முதலிய சேவைகள் செய்வது போன்றுதான் இத்திருக்கோவிலின் பரம்பரை நாவிதர்கள் மட்டுமே இத்திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு மொட்டை அடிக்கும் உரிமையை பெற்றுள்ளார்கள். பக்தர்கள் அதிகமாக வரும்போது பரம்பரை நாவிதர்கள் விரைவான சேவைக்காகவும், பக்தர்களின் வசதிக்காகவும் வெளியாட்களை உதவிக்கு வைத்து பக்தர்களுக்கு சேவை செய்வது வழக்கம். அவ்வாறே இத்திருக்கோவிலில் பக்தர்களுக்கு முடி காணிக்கை செய்யப்பட்டு வருகின்றது. இத்திருக்கோவிலில் பரம்பரை நாவிதர்களாக 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மட்டும் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களது சேவையை நீதிமன்றம் அ.வ.எண்.136/1960 ல் அளித்த தீர்ப்பின் மூலம் உறுதிபடுத்தியுள்ளது. அதனை மாண்பமை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் அங்கீகரித்துள்ளது. 1 முதல் 6 எதிர்மனுதாரர்களை தவிர வேறு எவரும் பரம்பரை நாவிதர்கள் கிடையாது. மனுதாரரே அல்லது அவரின் முன்னோர்களோ வழக்கு திருக்கோவிலில் ஒருபோதும் பரம்பரை நாவிதர்களாக செயலாற்றியது கிடையாது. மேலும், மனுதாரரையோ அல்லது அவரின் முன்னோர்களையோ இத்திருக்கோவில் நிர்வாகமோ அல்லது இந்து சமய அறநிலையத்துறை அலுவலகமோ அல்லது நீதிமன்றங்களோ அங்கீகரித்தது

கிடையாது. மனுதாரர் தனது மனுவிற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மனுதாரர் அசல் வழக்கிற்கு தேவையான தரப்பினரோ அல்லது அவசிய தரப்பினரோ கிடையாது என்பதால் மனுதாரரை வழக்கில் எந்த நிலையிலும் அனுமதிக்க முடியாது. வழக்கினை காலம் கடத்தவே மனுவினை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரர்கள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7) தீர்வு</u>:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் கி.சாத்தூரப்ப பண்டிதனின் வாரிசான கி.சா.கிருஷ்ணன் பண்டிதனின் வாரிசான மனுதாரர்/3ம் நபராகிய மனுதாரரை அசல் மனுவில் 7ம் உத்தேச வாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 28.02.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மனுதாரரால் மனுவில் சொல்லியுள்ள விபரங்களையும், எதிர்மனுதாரர்கள் எதிருரையில் சொல்லியுள்ள விபரங்களையும் மனுதாரர் இந்த வழக்கில் அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதையும் வழக்கு விசாரணையின்போது

மட்டுமே தீர்மானிக்க முடியும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, கி.சாத்தூரப்ப பண்டிதனின் வாரிசான கி.சா.கிருஷ்ணன் பண்டிதனின் வாரிசான மனுதாரர்/3 ம் நபராகிய மனுதாரரை அசல் மனுவில் 7 ம் உத்தேச வாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கு நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி 28.02.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/3 ம் நபர்/7 ம் உத்தேச வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.